P.R.NO:21 நாள்: 07.08.2017

# பத்திரிக்கை செய்தி

குறு,சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை , படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் வரையிலான உற்பத்தி , ரூ.3.00 இலட்சம் வரையிலான சேவை மற்றும் ரூ.1.00 இலட்சம் வரையிலான வியாபாரம் சார்ந்த தொழில் நிறுவனங்கள் தொடங்க 25 விழுக்காடு ( 25 % ) அதிக பட்சமாக ரூ.1.25 இலட்சம் மானியத்துடன் வங்கி கடன் பெற ஏதுவாக வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP – UNEMPLOYED YOUTH EMPLOYEMENT GENERATION PROGRAMME ) என்ற தமிழக அரசின் சிறப்பான திட்டம் மாவட்ட தொழில் மையம் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற குறைந்த பட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.50 இலட்சம் மிகாமல் இருத்தல் வேண்டும். பொது பிரிவினருக்கு வயது வரம்பு 18 முதல் 35 வயது வரையும் சிறப்பு பிரிவினருக்கு ( தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சிறுபான்மையினர் /மகளிர் / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்று திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ) 18 முதல் 45 வயது வரையும் இருத்தல் வேண்டும்.

திட்டத்தின் பங்கு தொகையாக திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு ( 10 % ) பொது பிரிவினரும், 5 விழுக்காடு ( 5 % ) சிறப்பு பிரிவினரும் வங்கிக்கு செலுத்த வேண்டும்

இத்திட்டத்தில் விண்ணப்பிக்க தகுதியுடைய , ஆர்வமுடைய படித்த வேலை வாய்ப்பற்ற தொழில் முனைவோர் www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து பதிவிறக்கம் செய்யப்பட்ட இரண்டு நகல்களுடன் குடும்ப அட்டை, கல்வி சான்று , சாதிச்சான்று, விலைப்புள்ளி , திட்ட அறிக்கை, மற்றும் உறுதி மொழி பத்திரம் ஆகியவற்றின் நகல்களுடன் மாவட்டத்தொழில் மையம் , புனித தாமஸ் ரோடு, திருநெல்வேலி என்ற முகவரியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பயன் பெறுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

பொதுமேலாளர்
மாவட்டத்தொழில் மையம்
திருநெல்வேலி - 11.

மாவட்ட ஆட்சி தலைவர்
திருநெல்வேலி மாவட்டம்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.